


**15.05.2025**

தலைப்பு செய்திகள்

- **மசோதாக்கள் மீது குறிப்பிட்ட காலவரைக்குள் முடிவெடுப்பது குறித்து** குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு உச்சநீதிமன்றத்திடம் விளக்கம் கேட்டு குறிப்பு அனுப்பியுள்ளார்.

- **மீன்வளத்துறையின் வளர்ச்சி குறித்து பிரதமர் திரு.** நரேந்திரமோடி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

- **பாதுகாப்பு பணியோடு, ராணுவ நடவடிக்கையிலும் சிறப்புற** செயலாற்ற முடியும் என்று ஆபரேஷன் சிந்தூர் பறைசாற்றி இருப்பதாக பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

- **ராணுவ வீரர்கள் மற்றும் பாதுகாப்பு வீரர்களுக்கு ஆதரவு** தெரிவிக்கும் தேசியகொடி அணிவகுப்பு ஊர்வலம் இன்றுமாலை திருச்சியில் நடைபெறுகிறது.

- **சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு** முந்தைய சுற்றில் யூக்கி பாம்ப்ரி, ராபர்ட் இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

**மசோதாக்கள் மீது குறிப்பிட்ட** காலவரைக்குள் முடிவெடுப்பது குறித்து குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு உச்சநீதிமன்றத்திற்கு குறிப்பு அனுப்பியுள்ளார்.

அரசியல் சாசனத்தின் கீழ் குறிப்பிட்ட காலவரை நிர்ணயிக்கப்படாத நிலையில் உரிய காலத்திற்குள் நடவடிக்கை எடுக்க உச்சநீதிமன்றம் அறிவுறுத்தி உள்ளது

குறித்து
14 கேள்விகளை குடியரசு தலைவர் கேட்டுள்ளார்.

குடியரசு தலைவர் மற்றும் ஆளுநர்கள் மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க வகைசெய்யும் அரசியல் சாசனத்தின் 200 மற்றும் 201-வது பிரிவில் குறிப்பிட்ட காலவரை எதுவும் நிர்ணயிக்கப் படவில்லை என்றும் குடியரசு தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டம் மற்றும் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளில் உச்சநீதிமன்றத்தின் ஆலோசனையை குடியரசு தலைவர் பெற அரசியல் சாசனத்தின் 143 ஒன்றாம் பிரிவின் கீழ் இந்த கேள்வி உச்சநீதி மன்றத்திடம் கேட்கப்பட்டுள்ளது.

**இதனிடையே** காலநிர்ணயம் தொடர்பாக குடியரசு தலைவர் ஏன் ஆட்சேபனை தெரிவிக்க வேண்டுமென்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கேள்வி கோரியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இச்செயல் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசை வலுவிழக்க செய்யும் என்று கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖

**பிரதமர்**

நாட்டின் மீன்வளத்துறையின் வளர்ச்சி முன்னேற்றங்கள், எதிர்கால திட்டங்கள் குறித்து பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

புதுதில்லியில் பிரதமர் தலைமையில் நடைபெற்ற இந்த ஆய்வுக் கூட்டத்தில் மீன்பிடி தொழில் மற்றும் கடல் உணவு ஏற்றுமதி குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

நாட்டின் மீன்வளத்துறை முன் எப்போதும் இல்லாத அளவு பெரும் வளர்ச்சி கண்டு வரும் நிலையில் மீன்வளத் துறையை மேலும் முன்னெடுத்து செல்வது குறித்த நவீன திட்டங்கள் குறித்தும் இதில் ஆராயப்பட்டதாக தெரிகிறது.

மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங், இத்துறையின் உயரதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

❖❖❖❖❖❖

ராஜ்நாத் சிங்

**தீவிரவாதத்திற்கு எதிராக உயிர்த்தியாகம் புரிந்த** நமது வீரர்களுக்கு நாடே தலைவணங்குவதாக மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்

ஜம்முகாஷ்மீரின் பாதுகாப்பு நிலைமைய ஆய்வு செய்வதற்காக இன்று ஸ்ரீநகர் வந்தடைந்து ராணுவ வீரர்களிடையே கலந்துரையாடிய அவர், ஆபரேஷன் சிந்தூர் வெற்றிக்காக அவர்களுக்கு பாராட்டு தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் வெற்றியால் நாடே பெருமை அடைந்திருப்பதாக கூறியஅவர், இந்திய குடிமகனாக அனைத்து ராணுவ வீரர்களுக்கும் நன்றியை உரித்தாக்குவதாக கூறினார்.

பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதிகளுக்கு எதிராக வீரதீரத்துடன் அனைவரும் சண்டையிட்டதாக கூறிய அவர், பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்த அப்பாவி மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதாக குறிப்பிட்டார்.

இந்த அபரேஷன் சிந்தூர் நடவடிக்கைகளில் காயமடைந்த இந்திய வீரர்கள் விரைந்து குணமடைய பிரார்த்திப்பதாக அவர் கூறினார்.

தேசத்தை பாதுகாப்பதோடு தக்க பதிலடியும் வழங்க முடியும் என்பதை ஆபரேஷன் சிந்தூர் பறைசாற்றியிருப்பதாகவும் குறிப்பிட்ட திரு. ராஜ்நாத் சிங், தீவிரவாதிகளுக்கு எதிரான மிகப்பெரிய நடவடிக்கை இது என்றார்.

❖❖❖❖❖❖

**எல். முருகன்**

**அகர்த்தலா மற்றும் பெலோனியா மாநிலங்களின்** வளர்ச்சித் திட்டங்களை ஆய்வு செய்வதற்காக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் 2 நாள் பயணமாக இன்று அங்கு செல்கிறார்.

ராணுவத்தின் வெற்றியை பறைசாற்றும் பி.ஜே.பி-யின் மூவர்ண கொடி யாத்திரையில் டாக்டர் எல்.முருகன் தெற்கு திரிபுரா மாவட்டத்தில் பங்கேற்கிறார்.

❖❖❖❖❖❖

**வக்ஃப்**

**வக்ஃப் சட்டத்திருத்தத்திற்கு எதிராக** தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் அடிப்படையில் இடைக்கால தீர்ப்பு வழங்குவது குறித்து பரிசீலிப்பதற்கான முடிவு வரும் 20-ம் தேதி மேற்கொள்ளப்படும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் தலைமையிலான அமர்வு இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளது.

❖❖❖❖❖❖

## என்ட்ரிக் ரெய்னா

**மத்திய அமெரிக்க நாடுகளில் ஒன்றான** ஹாண்டுராஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் எடார்டோ என்ட்ரிக் ரெய்னா கார்சியா அரசுமுறை பயணமாக இன்று புதுதில்லி வந்தடைந்தார்.

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் உள்ளிட்டோரை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசனைகளை அவர் மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖

## கடல்நீர்

**இந்திய கடலோர காவல்படை கப்பல்களில்** பயன்படுத்தப்படும் உயர் அழுத்த கடல்நீரை சுத்திகரிக்கும் திறன்கொண்ட, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அதிநவீன தொழில்நுட்பத்தை இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி முகமை உருவாக்கியுள்ளது.

கான்பூரை அடிப்படையாக கொண்ட ஆய்வகத்தில், இந்த தொழில்நுட்ப சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது.

பயன்பாட்டிற்கு வருவதற்கு முன்னர் பல்வேறு கட்ட சோதனைகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எட்டே மாதங்களில் உருவாக்கப்பட்ட படைப்பாற்றல் திறன்கொண்ட இந்த அதிநவீன தொழில்நுட்பத்தால் கடலோர பகுதிகள் பெரிதும் பயனடையும்.

❖❖❖❖❖❖

## முதலமைச்சர்

**உதகை அரசு தாவரவியல் பூங்காவில் 127-வது** மலர் கண்காட்சியை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

தொடர்ந்து கண்காட்சியில் அரசின் சார்பில் அமைக்கப் பட்டுள்ள பல்வேறு அரங்குகளையும் அவர் பார்வையிட்டார்.

வரும் 25-ம் தேதிவரை நடைபெறும் இக்கண்காட்சியில் பல்வேறு நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ள 275 வகையான மலர்ச்செடிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மலர்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட ராஜராஜ சோழன் அரண்மனை, கல்லணை போன்றவற்றை முதலமைச்சர் பார்வையிட்டார்.

❖❖❖❖❖❖

**மா.சுப்ரமணியன்**

**சுகாதார வசதிகள் காலதாமதமின்றி** பொதுமக்களுக்கு கிடைப்பதை அதிகாரிகள் உறுதி செய்யவேண்டுமென்று மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் கூறியுள்ளார்.

சேலம் மாவட்டம் ஏற்காடு மாரமங்கலம் பகுதியில் பழங்குடியினர் வசிக்கும் மாத்தூர் கிராமத்தில் ஆய்வு மேற்கொண்ட அவர், மருத்துவ சேவைகள் ஒவ்வொரு இல்லத்திற்கும் முழுமையாக கிடைக்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖

**மனோ தங்கராஜ்**

பால் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு தேவையான உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று, அதிகாரிகளை மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு.மனோ தங்கராஜ் அறிவுறுத்தியுள்ளார்.

நாகை மாவட்டம், பிரதாப ராமபுரத்தில் பால் குளிரூட்டப்படும் நிலையத்தை இன்று ஆய்வு செய்த அவர், பால் உற்பத்தியாளர்களுக்கு ஆவின் அலுவலர்கள் இடையூறு செய்வது கண்டறியப்பட்டதால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளார்.

பால் கொள்முதல் செய்யும் பகுதிகளை தூய்மையாக கையாள்வதை உறுதி செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

❖❖❖❖❖❖

**நயினார் நாகேந்திரன்**

**தமிழ்நாட்டில் நாளுக்குநாள் குற்றச்சம்பவங்கள்** அதிகரித்து வருவதாக பி.ஜே.பி.மாநிலத்தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு குற்றச்சம்பவங்கள் 52 சதவிகிதம் அதிகரித்துள்ளதாக கூறினார்.

திருச்சியில் ராணுவ வீரர்கள் மற்றும் பாதுகாப்பு வீரர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் முன்னாள் ராணுவத்தினர் சார்பில் இன்று நடைபெறவுள்ள தேசியகொடி

அணிவகுப்பு ஊர்வலத்தில் கட்சி பாகுபாடின்றி அனைத்து தரப்பினரும் பங்கேற்க அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

❖❖❖❖❖❖

**செயற்கைகோள்**

**எல்லைப்பகுதிகளை கண்காணிக்கும் இஸ்ரோவின்** ரீசாட் 1-B ரேடார் இமேஜிங் செயற்கைகோள் ஸ்ரீஹரிகோட்டா சதீஸ்தவான் விண்வெளி மையத்திலிருந்து வரும் 18-ம் தேதி காலை மணி 5.59-க்கு விண்ணில் ஏவப்படுகிறது.

இதற்கான இறுதிக்கட்ட பணிகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஆயிரத்து 710 கிலோ எடைகொண்ட இந்த செயற்கை கோள் இந்தியாவிற்கான பிரத்யேக புவி கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ளும்.

❖❖❖❖❖❖

**ராமதாஸ்**

**மகளிர் உரிமைத்தொகை பெற தமிழகம்** முழுவதும் விண்ணப்பங்கள் பெறும் முகாம் நடைபெற்று வரும் நிலையில் எத்தனை பேருக்கு அது வழங்கப்படும் என்பது குறித்து அரசு தெளிவுப்படுத்த வேண்டும் என்று பா.ம.க நிறுவனர் டாக்டர் ராமதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

சென்னையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் அரசு இதற்காக ஒதுக்கியுள்ள நிதியை கொண்டு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை வழங்குவது குறித்து கேள்வி எழுப்பியுள்ளார்.

❖❖❖❖❖❖

**நெல்லை பள்ளி வாகனம் - வாய்ஸ்**

கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் விரைவில் திறக்கப்பட உள்ள நிலையில் பள்ளி வாகனங்களின் பாதுகாப்பு குறித்த நடவடிக்கைகளை தமிழக அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

இதன்படி, நெல்லை மாவட்டத்தில் 270 பள்ளி வாகனங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.சுகுமார்** இன்று ஆய்வு மேற்கொண்டார்.

❖❖❖❖❖❖

**கிருஷ்ணகிரி - வாய்ஸ்**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கோடை வெயில் மற்றும் போதிய மழையின்மை காரணமாக, **மா உற்பத்தி** குறைந்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖

**கோவில் வாய்ஸ்**

வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில், அருள்மிகு கெங்கையம்மன் கோவில் சிரசு ஊர்வல திருவிழா இன்று மிக விமர்சையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் மோகன் தெரிவிக்கிறார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖

**இருவரி**

**சிவகங்கை மாவட்டத்தில் பிரதமரின் கிசான்** சம்மான் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்கிடும் வகையில் சிறப்பு முகாம்கள் வரும் 31-ம் தேதிவரை நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஆஷாஅஜித் கூறியுள்ளார்.

**பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை, வேப்பூர்,** கொளக்காநத்தம் ஆகிய அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் முதலாமாண்டு சேர்க்கை நடைபெறுவதால் தகுதியுடைய மாணாக்கர் வரும் 27-ம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திருமதி. கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

**தர்மபுரி மாவட்டத்தில் புள்ளியியல் துறை மற்றும்** திட்ட அமலாக்கத்துறையின் 75-வது ஆண்டு நிறைவை குறிக்கும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதியமான் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**பிரான்சில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ்** ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் யூக்கி பாம்ப்ரி, அமெரிக்காவின் ராபர்ட் இணை -

ஸ்விட்சர்லாந்தின் ஜேக்கப், நெதர்லாந்தின் டேவிட் இணையை இன்று எதிர்கொள்கிறது.

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**